வீடியோ கமரா,
T.V. வீடியோ டெக்
ஆகியவற்றை
உத்தரவாதத்துடன்
உடனுக்குடன்
திருத்திக் கொள்வதற்கு
எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

உங்கள் இல்லங்களில்
நிகழும்
மங்கள நிகழ்வுகளின்
நவீன முறை வீடியோ
படப்பிடிப்பிற்கு
எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 21 புதன்கிழமை (05-01-1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 40

# வடமராட்சிக் கடலில் கடற்படை அட்டகாசம்

# மீனவர் பலி; எண்மரைக் காணவில்லை!

## கடற்றொழில் உபகரணங்கள் சேதம்

— வடமராட்சி, வல்வெட்டித்துறை செய்தியாளர்கள் —

வடமராட்சி, ஜனவரி 5

வடமராட்சி வடக்கு சக்கோட்டை, திக்கம் கடற் பகுதியில் மீனவர்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் நேற்றுக் காலை கண்மூடித்தனமான தாக்குதல்களை நடத்தினர்.

கடற்படைத் தாக்குதலுக்கு இலக்கான — மூன்று கட்டுமரங்களில் சென்ற— ஒன்பது மீனவர்களில் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்; ஏனைய 8 மீனவர்களுக்கும் என்ன நடந்தது என்பது தெரியவில்லை; தேடுதலின் பின் அவர்கள் சென்ற மூன்று கட்டுமரங்களும் இயந்திரம் முதல் மீன்பிடி உபகரணங்கள் வரை எதுவும் இல்லாத நிலையில் கடலில் இருந்து மீட்கப்பட்டன.

மீனவர்கள் காணாமற் போனதையடுத்து சக்கோட்டைப் பகுதி சோகத்தில் மூழ்கியுள்ளது.

காணாமற்போன மீனவர்களின் உறவினர்கள் நேற்று மாலை வரை கடற்கரையில் நின்று கடலைப் பார்த்தபடி அழுத வண்ணம் நின்றனர்.

நேற்றுக் காலை 7 மணியளவில் வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் கிழக்கில் இருந்து, மேற்குப் பகுதியை நோக்கி 'டோரா' விசைப் படகில் வந்த படையினரே இத்தாக்குதலை நடத்தினர். பீரங்கி மற்றும் கலிபர் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

கடற்படையினரைக் கண்டதும் கட்டுமரங்கள், மற்றும் மோட்டார் படகுகளில் சென்ற மீனவர்கள் வேகமாக கரைக்குத் திரும்ப எத்தனித்தனர். பல படகுகள் சேதங்களுடன் கரை வந்து சேர்ந்தன. பல மீனவர்கள் கடலில் குதித்து நீந்திக் கரை சேர்ந்தனர்.

ஆனால் மூன்று கட்டுமரங்களில் சென்ற 9 பேர் படையினரின் பிடிக்குள் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

படையினர் தாக்குதல் நடத்தி விட்டுச் சென்ற பின்னர் கடலில் நடத்தப்பட்ட தேடுதலின் போது மூன்று கட்டு மரங்களும் சேதமுற்ற நிலையில் கடலிலிருந்து மீட்கப்பட்டன.

சக்கோட்டையைச் சேர்ந்த சந்தியாப்பிள்ளை இருதயராஜ் (வயது 18) என்ற இளைஞர் பலத்த சூட்டுக் காயங்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## குருநகர் மீனவர் குறித்தும் தகவல் இல்லை

குருநகர், ஜன. 5

கடந்த 31 ஆம் திகதி இரவு கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர் ஒருவர் நான்கு நாட்களாகியும் கரை திரும்பவில்லை.

அன்றிரவு மண்டைதீவு படையினர் முகாமில் இருந்து

(3ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் விடிகாலை வேளை பரவலாக ஹெலித் தாக்குதல்கள்!

யாழ்ப்பாணம், ஜன. 5

நேற்று விடிகாலையில்— 5 மணி முதல் 5.45 மணிவரையான வேளையில் — ஹெலிக்கொப்டர் ஒன்று குடாநாட்டில் பரவலாகத் தாக்குதல்களை நடத்தியது.

வலிகாமம் கிழக்கு, தென்மராட்சி, யாழ்ப்பாணக் கரையோரப் பகுதி, கல்லுண்டாய் வெளிப் பகுதிகளிலேயே போக்குவரத்தில் ஈடுபட்டிருந்தோர் மற்றும் கடற்றொழிலுக்குச் சென்று கொண்டிருந்தோர் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

நேற்றுக் காலை 5.40 மணிக்கு சாவகச்சேரி நகர்ப் பகுதியை வட்டமிட்ட ஹெலி சந்தையில் நின்ற பொதுமக்கள் மீது கண்மூடித்தனமான 50 கலிபர் மற்றும் கிரனேட் தாக்குதல்களை நடத்தியது. விறகு வியாபாரி ஒருவர் காயமடைந்தார். சாவகச்சேரி இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, கட்டடங்களும், இரு வீடுகளும், புகைப்பட நிலையம் ஒன்றும் சேதமடைந்தன.

பயணிகளை ஏற்றி வந்த வாகனத்தை நோக்கி சாவகச்சேரி தபால் கந்தோர் சந்திக்கு அருகில் தாக்குதல் நடத்தப்பட்டது எனினும் பயணிகள்

( 3ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய உதவி குறித்து ஆராய ஹமீத் இம்மாதம் செல்வார்

கொழும்பு, ஜன. 5

வடக்கு-கிழக்கு யுத்தத்தை இந்த வருடத்துக்குள் முடிவுக்கு கொண்டு வருவதற்கு இந்தியாவின் ஒத்துழைப்பை பெறுவது சம்பந்தமாக வெளிநாட்டு அமைச்சர் ஏ.ஸி எஸ். ஹமீத் இந்த மாதம் இந்தியாவுக்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

அங்கு அவர் இந்தியாவுடன் இது குறித்து விரிவாகப் பேச்சுநடத்துவார் என்றும் 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

இந்திய அமைதிப் படையை மீண்டும் அழைப்பது குறித்து அரசின் உயர் மட்டத்தில் முக்கிய புள்ளிகள் பலர் கோரிக்கை விடுத்திருப்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தில் புதிய தந்திரோபாயங்கள் புகுத்தப்படும் என்கிறார் புதிய தளபதி

கொழும்பு, ஜன. 5

★ இராணுவத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்படவுள்ளன.

★ வடக்கு, கிழக்கு யுத்தத்தில் விரைவில் புதிய தந்திரோபாயங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

புதிய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வா இராணுவத் தலைமையகத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்த கருத்துக்களின் சில பகுதிகள் ஏற்கனவே உதயனில் (2.1.94 இதழில்) வெளியாகியிருந்தன. அவர் தெரிவித்த மற்றும் சில கருத்துக்கள் வருமாறு:-

★ எமக்கு போர்த்தளபாடங்கள், வாகனங்கள், துப்பாக்கிகள் தேவை. இவற்றில் சிலவற்றைப் பெறுவதற்கு ஏற்கனவே ''ஓடர்கள்'' அனுப்பப்பட்டுவிட்டன.

★ சிறந்த யுத்த இயந்திரம் ஒன்றை கட்டிஎழுப்ப வேண்டும்; முப்படைகளுக்கும் இடையே ஒருங்கிணைப்பு அத்தியாவசியமானது.

இந்த யுத்தத்தில் வெற்றியீட்டுவதற்கு காலக்கெடு ஒன்றை நிர்ணயிக்கமுடியாது. எனினும் விரைவில் வெற்றி காணுவோம் என்று நம்புகின்றேன்.

★ கடந்த காலங்களில் யுத்த

( 3ஆம் பக்கம் பார்க்க)

### உணவுப் பொருள்கள் வாகனங்களுக்கு

## பாதுகாப்பு வழங்குவதை செஞ்சிலுவை மறுபரிசீலனை

கொழும்பு, ஜன. 5

யாழ். குடாநாட்டுக்கு அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டு செல்லும் கப்பல்களுக்கும்—

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்குப் பொருள்களைக் கொண்டு செல்லும் வாகனங்களுக்கும் - பாதுகாப்பு வழங்கும் நடைமுறையை மறுபரிசீலனை செய்யப்போவதாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அறிவித்திருக்கிறது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு ''ட்ரான்சிஸ்டர் பற்றரிகளைக்'' கடத்த முயற்சித்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மகாநாயக்க தேரர்களிடம் புதிய தளபதி ஆசி பெற்றார்

புதிய இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வா நேற்று கண்டி தலதா மாளிகைக்குச் சென்று வழிபாடு செய்தார்.

மல்வத்தை பீடத்தின் மகா நாயக்கர் வண. ரம்புக்வெல்ல ஸ்ரீ விபசி தேரர், அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் வண. பலிப்பானே சந்தானந்த தேரர் ஆகியோரையும் தளபதி சந்தித்தார்.

புதிய தளபதி யுத்தத்தில் வெற்றி பெறவும் நாட்டில் சாந்தி சமாதானத்தை ஏற்படுத்தவும் மகா நாயக்கர்கள் ஆசி கூறியதாக அறிவிக்கப்பட்டது. (உ-த)

## குண்டு துளைக்காத கார்கள் நாட்டுக்குள் கடத்த முயற்சி!

ஜேர்மனியில் இருந்து களவாக கொண்டு வரப்பட்ட குண்டு துளைக்கமுடியாத கார்கள் இரண்டை சுங்கத் திணைக்களத்தின் உளவுப் பிரிவு கைப்பற்றியுள்ளதாக லங்காதீப செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தக் கார் ஒவ்வொன்றும் 5 கோடி ரூபா பெறுமதியானது என்றும்—

உரிய சுங்க வரி செலுத்தாமல் அவற்றைத் துறைமுகத்தை விட்டு வெளியே கொண்டு செல்ல முற்பட்ட சமயம் அவை கைப்பற்றப்பட்டன என்றும் கூறப்படுகிறது.

தனிப்பட்டவர்கள் இது போன்ற கார்களை இறக்குவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆயினும் சாதாரண ''நிஸான்'' வர்க்க கார்கள் என்று சுங்கத் திணைக்களத்திற்கு காட்டப்பட்டே இந்த கார்கள் கொள்கலன்களில் அடைக்கப்பட்ட நிலையில் கொண்டுவரப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

### கிழக்கு மற்றும் வவுனியாவுக்கான

## உள்ளூராட்சித் தேர்தல்களை ஒத்திவைக்க டி.பி. மறுப்பு

கொழும்பு, ஜன. 5

கிழக்கு மாகாணத்திலும், வவுனியாவிலும் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சிசபைத் தேர்தல்களை ஒத்திவைக்குமாறு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஐ. தே. க. அரசியல்வாதிகள் ஜனாதிபதியிடம் கேட்டுள்ளனர்.

தேர்தல்களை நடத்தக் கூடிய பாதுகாப்பான சூழ்நிலை அங்கும் தற்போது இல்லை என்றும் அவர்கள் ஜனாதிபதியிடம் சுட்டிக் காட்டியுள்ளனர்.

ஆனால் இத்தடவை தேர்தலை ஒத்திவைக்கும் உத்தேசம் எதுவும் தமக்கு இல்லை என்று ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க இவர்களிடம் கூறியதாக கொழும்பு பத்திரிகை செய்தி ஒன்று வெளியிட்டிருக்கிறது.

இதேவேளை —

இத்தேர்தல்களில் போட்டியிடும் ஐ.தே.க. வேட்பாளர் பட்டியல்களைத் தயாரிப்பதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் —

வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர் சிறிசேன குரே வேட்பாளர் பட்டியலை தயாரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## பொதுக் கல்வித் தேர்வு பெறுபேறுகள் இன்று

1993 இல் நடைபெற்ற தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வுக்கான பெறுபேறுகள் இன்று வெளியாகின்றன.

தேர்வின் பெறுபேறுகள் யாழ். மாவட்டத்தில் இன்று புதிய கல்விக் கோட்டங்களில் வெளியிடப்படும். வன்னிப் பகுதிக்குரிய பெறுபேறுகள் சம்பந்தப்பட்ட கோட்டங்களுக்கு ஒரு வார காலத்தில் அனுப்பி வைக்கப்படும்.

தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வில், தேசிய மற்றும் கோட்ட மட்டத்திக கூடுதல் புள்ளிகளைப் பெறுவோருக்கு தேசியத் தலைவரின் பரிசுகளும், பாராட்டிதழ்களும், பேரவையின் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இத்தேர்வுக்கு 16,500 க்கும் மேற்பட்ட மாணவர்கள் தோற்றினர்.

இத் தேர்வில் எட்டுப்பாடங்களிலும் சிறப்புத் திறமைத் தேர்ச்சி பெற்ற மாணவர் எண்ணிக்கை கல்லூரி ரீதியாக வருமாறு—

★ ஹாட்லி — 2
★ வேம்படி மகளிர் — 2
★ சுண்டிக்குளி மகளிர்—2
★ மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலை — 1
★ யாழ் இந்து — 1
★ பரியோவான் — 1
★ உடுப்பிட்டி மகளிர் —1

### மூச்சந்தி முரளி



அப்ப...யுத்தம்... சரணம்... கச்சாமி... என்டு ஆசி கூறியிருப்பினம் போலை......!

## தென்மாகாணத் தேர்தல்: ஜன: 18 முதல் வேட்பு மனு

கொழும்பு, ஜன. 5

கலைக்கப்பட்ட தென்மாகாண சபைக்கு புதிய தேர்தல் ஒன்றை நடத்துவது தொடர்பான பூர்வாங்க அறிவிப்பை தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா நேற்று வெளியிட்டார்.

தேர்தலுக்கான நியமனப் பத்திரங்களை இம்மாதம் 18 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களின் செயலகங்களில் சமர்ப்பிக்கலாம் என்று அவர் அறிவித்துள்ளார்.

நேற்று முதல் 5வாரத்துக்கு முந்தாமலும் 8 வாரங்களுக்குப் பிந்தாமலும் தேர்தல் நடைபெறும்.

கடந்த மாதம் 31ஆம் திகதி தென் மாகாண சபை கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து மாகாணசபைகள் தேர்தல் சட்டத்துக்கு அமைய தேர்தல் ஆணையாளர் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

## தென்மாகாணத் தேர்தல் ஒத்திவைக்கப்படலாம்

தென்மாகாணசபைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் கோரப்பட்டிருப்பினும் அத்தேர்தல் உடனடியாக நடக்குமா என்பது சந்தேகமே என்று செய்தி ஏஜென்ஸி ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது.

இரத்தினபுரி [illegible] பகுதியில் புதைகுழி [illegible] இருந்து அரசு சார்புப் படை[illegible]களால் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் மக்களின் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. இந்தச் செய்தி அரசுக்கு பெரும் செல்வாக்கு இழப்பை ஏற்படுத்தும் என்பதால் அரசு இந்தச் சந்தர்ப்[illegible] தேர்தலை நடத்த விரும்பாது என்றும் தெரிவிக்கப்பட்டது.

### பேச்சு நடத்துவதாயின்

## பேசவிருக்கும் விடயங்களை புலிகள் தெரிவிக்க வேண்டும்

### ஜனாதிபதி டி.பி. கூறுகிறார்

கொழும்பு, ஜன. 5

பேச்சுவார்த்தை நடத்துவதாயின் பேசவிருக்கும் விடயங்களை முன்கூட்டியே புலிகள் எமக்குத் தெரிவிக்கவேண்டும்:

—இவ்வாறு கூறியுள்ளார் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க.

புலிகளுடன் பேச்சு நடத்துவது குறித்து கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு ஜனாதிபதி அளித்த பேட்டியின் ஒருபகுதி நேற்று முன்தினம் உதயனில் பிரசுரமாகியிருந்தது. அப்பேட்டியிலேயே டி. பி. விஜேதுங்க மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

கேள்வி: 1994 இல் வடக்கு-கிழக்கு யுத்தம் முடிவுக்கு வரும் என்ற நம்பிக்கை உங்களுக்கு உண்டா?

இராணுவத்தீர்வு அல்லது பேச்சுவார்த்தை மூலம் தீர்வு ஒன்றில் நீங்கள் தங்கியுள்ளீர்களா?

பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முடியும் என்று வடக்கு-கிழக்கு புதிய ஆளுநர் லயனல் பெர்னாண்டோ நம்பியுள்ளார் என்று தெரிகின்றது. நீங்கள் எப்படி உணருகிறீர்கள்?

விஜேதுங்கா: ஆம் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை என்றைக்குமே நான் கூறி வந்துள்ளேன். அப்பாவி மக்களைக் காப்பாற்றவே அங்கு எமது படையினர் உள்ளனர். பேச்சுக்கள் நடத்த என்றுமே நாம் தயாராக இருக்கிறோம். பேச்சுவார்த்தையை இன்னொரு

(3 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாவுடன் பேச்சு நடத்தும் தமது முயற்சிக்கு வரவேற்பாம்

### சபாநாயகர் சொல்கிறார்

கொழும்பு, ஜன. 5

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை நடத்தும் தமது முயற்சிக்கு நல்ல வரவேற்புக் கிடைத்துள்ளதாக —

சபாநாயகர் எம்.எச்.முஹம்மது தெரிவித்துள்ளார்.

கொழும்பு தமிழ் வார இதழுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

அச்செவ்வியில் அவர் தெரிவித்த ஏனைய முக்கிய கருத்துக்கள் வருமாறு:-

இப்பேச்சுவார்த்தை தொடர்பாக ஆரம்பக் கருத்துக்கள் பரிமாறப்பட்டுள்ளன. இடம், திகதி ஆகியவை பற்றியே இன்னமும் அறிவிக்கப்படவில்லை. அந்த அறிவிப்பை விரைவில் எதிர்பார்க்கிறேன்.

இனப்பிரச்சினைக்கு எந்த வகையிலேனும் நிரந்தரத் தீர்வைக் காண வேண்டும் என்பதே எனது பிரதான நோக்கமாகும்.

ஆஸ்திரேலியாவுக்கு நான் சென்ற சமயம் அங்கு முக்கிய தமிழ்ப் பிரமுகர்களை சந்தித்தேன். அவர்கள் விடுதலைப் புலிகளுடன் நெருக்கத்துடன் செயற்படுபவர்கள். அவர்களுடன் விரிவாகப் பேசினேன். அவ்வேளையில் வட - கிழக்கு இணைப்பு, அதிக அதிகாரங்களை பெற்றுக் கொடுத்தல், தொடர்ந்து பேச்சுவார்த்தை மேற்கொள்ளுவதன் அவசியம் ஆகியவை குறித்து வலியுறுத்தப்பட்டது.

கடந்த 50 ஆண்டுகள் அரசியலில் ஈடுபட்டுள்ள நான் எனது அனுபவங்களையும், அறிவையும் இந்தவேளையில் பயன்படுத்த முடியும் என நம்புகிறேன்.

மக்களின் கருத்துக்களும், அரசியல் தலைவர்களின் கருத்துக்களும் ஒன்றல்ல அவை

(3 ஆம் பக்கம் பார்க்க)

## எலும்புக் கூடுகள் மீட்கப்பட்ட புதைகுழிக்கு பலத்த பாதுகாப்பு!

கொழும்பு, ஜன. 5

இரத்தினபுரி சூரியகந்தவில் எலும்புக் கூடுகள் மீட்கப்பட்ட புதைகுழிக்கு பலத்த பாதுகாப்பு வழங்கும்படி எம்பிலிப்பிட்டிய நீதிவான் தி. பீ. ரணசிங்க கட்டளையிட்டுள்ளார்.

எலும்புக்கூடுகள் குறித்து தகவல் வெளியிட்ட ஸ்ரீ. ல சு. க. [illegible] கோரிக்கைக்கு இணங்க—

பாதுகாப்பு ஏற்பாடுகளில் சு. கவினரும் பங்கெடுக்க அனுமதி வழங்கும்படியும் பொலீஸாருக்கு அவர் உத்தரவிட்டார்.

காணாமற்போன மாணவர்களின் பெற்றோர்களும் புதைகுழிப் பகுதியில் 24 மணி நேரமும் மாறி மாறி காவல் செய்யத் தொடங்கியுள்ளனர்.

சுமார் 40 அடி நீளமும் 30 முதல் 40 அடி ஆழமும் கொண்ட இரு புதைகுழிகளிலும் இருந்து இதுவரை 22 பேரின் எலும்புக்கூடுகள் மற்றும் மண்டையோடுகள் மீட்கப்பட்டுள்ளன. சுமார் 300 பேர் வரை இங்கு புதைக்கப்பட்டிருக்கக்கூடும் என இப்போது கருதப்படுகிறது.

புதைகுழியில் மீட்புப் பணி மீண்டும் எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பமாகும் என எம்பிலிப்பிட்டிய நீதிவான் அறிவித்துள்ளார். (உ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

தமிழீழ, அரசாங்க, விடு முறை நாட்கள் அடங்கிய படக் கலண்டர்கள் ரூபா 6/-க்கு எம்மிடம் விலாசம் பதிப்பித்து பெற்றுக்கொள்ள லாம். மற்றும் பெரிய நடுத்தர கலண்டர்களுக்கும் ஸ்ரீலங்கா அச்சகம், ராஜா தியேட்டர் அருகில், ஸ்ரீகாந்தா அச்சக லேன், யாழ்ப்பாணம். (28628)

### கோழிக்குஞ்சு விற்பனை

ஹைலைன் (Hyline Brown) பேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. 'மல்லிகாபதி', சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (28742)

### மலிவு விற்பனை

மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள் மலிவு விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. இலவசமாக நேர அட்டவணை வழங்கப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி, (வெலிங்டன் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம். (சி-6892)

### கதவுகள் விற்பனைக்கு

பாவித்த கதவுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: த. பாலசுப்பிரமணியம், மயிலன்தோட்டம், உரும்பராய் கிழக்கு, உரும்பராய். (28776)

### வெளிவந்துவிட்டது

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் மீள் பார்வையுடன் கூடிய ஆண்டு 9 சைவநெறி வெளிவந்து விட்டது ஆக்கம்: க. சந்திரசேகரம் வெளியீடு: சோதி புத்தகசாலை, கச்சாய் வீதி, (மக்கள் கடை அருகில்) சாவகச்சேரி. ஏக விநியோகஸ்தர்கள்; ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை, இல. 235, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-6905)

### மணப்பெண் தேவை

யாழ். இந்து பட்டதாரி ஆசிரியர், வயது 38, ரேவதி 3, செவ்வாய் 8இல் கிரகபாவம் 44, மணமகள் ஆசிரியை, அழகு, நற்பண்பு, வயது 32க்குள் விரும்பத்தக்கது. சாதகத்துடன் முழு விவரம் அறியத் தரவும் இல. 583, மே/பா, உதயன் யாழ்ப்பாணம். (28743)

### மணமகள் தேவை

கிறிஸ்தவ மதம், 43 வயது குடிப்பழக்கமற்ற அரசாங்க உத்தியோகத்தருக்கு 36 வயதிற்குட்பட்ட மணப்பெண் தேவை. கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். இல: 584, மே/பா, உதயன் யாழ்ப்பாணம். (28775)

### உலக உலா

தென்மராட்சி மக்களுக்கோர் நற்செய்தி. உங்களுக்குத் தேவையான உலக உலா சஞ்சிகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்: சோதி புத்தகசாலை, கச்சாய் வீதி, (மக்கள் கடை அருகில்) சாவகச்சேரி. (சி-6921)

### திருமண சேவை

உள்ளூர், வெளியூர் மணமக்கள் தேவையா? தொடர்பு கொள்ளவும். அம்பாள் திருமண சேவை. இல. 22, ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (28773)

### மணமகன் தேவை

யாழ். இந்து, 25 வயது, உயரம் 5 அடி, அழகிய, சிவந்த நிறமுள்ள செவ்வாய் குற்றமற்ற, சுவாதி நட்சத்திரமும், A/L சித்தியடைந்த கம்பியூட்டர் தகைமையுள்ள மகளுக்கு பெற்றோர் வரனைத் தேடுகின்றனர். பொறியியலாளர், டாக்டர், கணக்காளர், பட்டதாரிகள் விரும்பத்தக்கது. சீதனமாக வீடு, பணம், நகைகள் வழங்கப்படும். இல. 924, மே/பா உதயன். (6890)

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? விவாகம் நடைபெறுமா? வியாபாரம் சிறக்குமா? விவசாயம் விருத்தியாகுமா? வெளிநாடு போகலாமா? கேட்டுப் பாருங்கள்! ஜாதகம், கைரேகை, எண் விஞ்ஞானம், சாமுத்திரிகாலட்சணம் அனைத்துக்கும் தொடர்பு: த. சிவானந்தன் பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (28764)

### தவறிவிட்டது

ஜோன்பிள்ளை அலோஷியஸ் புற்று நோயாளரின் கொழும்பு கொண்டு செல்ல வேண்டிய வைத்திய அறிக்கைப் பத்திரம், பாஸ் அனுமதி விண்ணப்பப் பத்திரம், கிராமசேவையாளர் கடிதம் அடங்கிய லக்ஸ்பிறே பை மருதனார்மடத்திற்கும் உரும்பராய் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தந்துதவவும். ஜோன்பிள்ளை அலோஷியஸ், சங்குவேலி தெற்கு, மானிப்பாய். (28771)

---

## அருண் கல்வி நிலையம்

நுணாவில், சாவகச்சேரி.

ஆண்டு 9, 10, 11 களுக்கான வகுப்புக்கள் ஆரம்பம்:

**08 - 01 - 1994**

பதிவுகள் ஏற்கப்படுகின்றன

**A/L 94**

வர்த்தக வினா- விடை வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

Commerce - BAZIL
Accounts - SAM

(28767)

---

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி சின்னராணி பெர்னாண்டோ**

(உரிமையாளர் J P. பெர்னாண்டோ அன் சன்ஸ் சரஸ்வதி கபே அன்லொட்ஸ் செட்டியார் தெரு. கொழும்பு-11)

அன்னை மடியில்: **12 — 09 — 1926**
ஆண்டவன் அழைப்பில்: **05 — 01 — 1992**

அன்னையாய் அகல்விளக்காய் ஆருயிராய் அருமருந்தாய்
அரும்பிறப்பாய் அழியாத அன்பின் பொக்கிஷமாய்
மின்னும் மிகையொளியாய் மிளிர்தனை மேதினியில்
மாசிலா மாணிக்கமே மாதரசே குலவிளக்கே
சின்னராணி எனும் சீர்மிகு பெர்னாண்டோவே
சாவை அணைத்தாலும் சாற்றுமுந்தன் பிரிவலைகள்
இன்னமும் இதயமதில் இயம்புமொரு கதைகேளாய்
இரண்டாண்டு சென்றாலும் இரங்குகின்றோம். சோதரியே
நீர் மற்றோர்க்கு புத்தாண்டு வாழ்த்து கூறும் இந்நாளில்
உமக்கு நினைவஞ்சலி செலுத்த வைத்தீரே.

இங்ஙனம் உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

திரு வ. இலங்கராஜசிங்கமும், குடும்பத்தினரும்

ஓசன் றேட்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டை.

[சி-6891]

---

## மகாபொல கொடுப்பனவு

இரண்டாம் வருட மாணவர்களுக்கான 6ஆம் தவணைப் பணமும், ஏனைய வருட மாணவர்களுக்கான 1ஆம் தவணைப்பணமும் யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி நவீனசந்தைக் கிளையில் மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் பின்வருமாறு செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| **கலைப் பிரிவு** | | |
| 2ஆம் 3ஆம், 4ஆம்வருட மாணவர்கள் | 04-01-1994<br>10-01-1994 | 9-00 — 12-00 முற்பகல்<br>9-00 — 12-00 முற்பகல் |
| **வியாபார நிர்வாகப் பிரிவு** | | |
| 2ஆம், 3ஆம், 4ஆம் வருட மாணவர்கள் | 05-01-1994<br>11-01-1994 | 9-00 — 12-00 முற்பகல்<br>9-00 — 12-00 முற்பகல் |
| **வர்த்தகப் பிரிவு** | | |
| 2ஆம், 3ஆம், 4ஆம் வருட மாணவர்கள் | 06-01-1994<br>12-01-1994 | 9-00 — 12-00 முற்பகல்<br>9-00 — 12-00 முற்பகல் |
| **மருத்துவப் பிரிவு** | | |
| 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம், இறுதிவருட மாணவர்கள் | 07-01-1994<br>17-01-1994 | 9-00 — 12-00 முற்பகல்<br>9-00 — 12-00 முற்பகல் |

கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை.

1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2. ரூபா 2/- பெறுமதியான முத்திரை

(சி/6916) — பதிவாளர்.

---

## வைத்திய சேவை

வாதரோகமா? தொய்வு வியாதியா? நேகபருமனா? உடல்மெலிவா? தலைமுடி உதிர்தலா? தலைமுடி நரைத்தலா? நரம்புத்தளர்ச்சியா; மாதவிடாய்க் கோளாறுகளா? சருமவியாதியா? குழந்தைகளின் பீடைகளா? கவலையை விடுங்கள்! சிறந்த சிகிச்சைக்கும் உயர்ந்த ஆலோசனைக்கும் உகந்த இடம்:

டாக்டர். த சிவானந்தன்,
D. A M, R. A. M. P (Cey.)

**"சிவா வைத்தியசாலை"**

384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு.

(28763)

---

## நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

### கல்வியாண்டு 1994

ஆண்டு **4** முதல் ஆண்டு **11** வரையிலான வகுப்புக்கள் ஆரம்பம் **05 — 01 — 1994**

| | |
|---|---|
| **விஞ்ஞானம்** | **கணிதம்** |
| இரா. செல்வவடிவேல், சண் | இந்திரன், லோகேஸ்வரன், வாமதேவன், மகேந்திரன் |
| **தமிழ்/சமயம்** | **சமூகக்கல்வி** |
| பண்டிதர், சுந்தரலிங்கம், யோகராணி | வேலா, சிவனேசன் |
| **ஆங்கிலம்** | **வர்த்தகம்** |
| மகாலிங்கம், தர்மலிங்கம் ரமேஸ் | நவம் |

அனுமதிகளை முன்கூட்டியே பதிவு செய்யவும்.

(சி/6854)

---

## கீன் கல்வி நிலையம்

பலாலி வீதி, திருநெல்வேலி.

### கல்வியாண்டு - 1994

**ஆரம்பம்: 06-01-1994** மாலை 3மணி

ஆண்டு 4 முதல் **O/L** வரை புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | திரு. இரா. செல்வவடிவேல்<br>திரு. கெனத் |
| கணிதம் | — | திரு. வாமதேவன்<br>திரு. சோமசேகரம் |
| தமிழ் | — | திரு. புலவர் சிவா<br>திரு ஜெயக்குமார் |
| சமூகக்கல்வி | — | திரு. குணசிங்கம்<br>திரு. சுகுமார் |
| ஆங்கிலம் | — | திரு. கதிர்காமநாதன்<br>திரு. சந்திரமௌலி |
| வர்த்தகம் | — | திரு. ஜெயரட்ணம் |

[சி-6893]

---

## நீங்காத நினைவில்
## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 12 — 12 — 1919



சிவபதம்: 28 — 12 — 1991

திருமதி

**பொன்னுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை**

(விழிசிட்டி, வித்தகபுரம், நெல்லிப்பளை)

திதி: 05 - 01 - 1994

உங்கள் கடமைகளில் வழுவாத எங்கள் அன்புக்குரிய அரசி! உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் அன்புடன் வாழும்:
கணவன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள்.

Dr. சி. சதாசிவம் (மகன்)
சித்தன்கேணி.

(28693)

---

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## ஆதனவரி அறிவித்தல்

1994 ஆம் ஆண்டுக்கான ஆதனவரியை 31-01-1994 ஆம் திகதிக்கு முன்பாக முழுமையாகச் செலுத்துவோர்களுக்கு அவ்வருட மொத்தவரியில் 10 வீதம் கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டுக்குரிய வரியை அக்கந்தாயத்தின் முதல் மாத முடிவுக்குள் செலுத்துவோருக்கு காலாண்டுக்கான வரியில் 5 வீதம் கழிவு வழங்கப்படும்.

குறிப்பிடப்பட்ட திகதிக்குள் ஆதனவரிகளைச் செலுத்தத் தவறினால் வசிப்பிடங்களுக்கும், வெற்றுக் காணிகளுக்கும் முறையே 15 வீதமும், ஏனைய ஆதனங்களுக்கு 20 வீதமும் விறாந்துக் கட்டணமாக வரியுடன் சேர்த்து செலுத்தப்பட வேண்டும்.

எனவே, தங்கள் ஆதனங்களுக்குரிய வரிகளை 31 - 01 - 1994 ஆம் திகதி பகல் 12-00 மணிக்கு முன்பாக முழுமையாக இக் காரியாலயத்தில் செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

குறிப்பு:

1. 1993 ஆம் ஆண்டு முடிய உள்ள வரி நிலுவைகள் செலுத்தப்பட்ட பின்பே 1994 ஆம் ஆண்டுக்கான வரி ஏற்றுக்கொள்ளப்படும்.
2. (வரி விலக்கு) சேதமடைந்துள்ள, காலியாகவுள்ள ஆதனங்களுக்கான வரிவிலக்கின் பொருட்டான விண்ணப்பங்கள் எழுத்து மூலம் 31 - 01 - 1994 க்கு முன் கிடைக்கக் கூடியதாக இக் காரியாலயத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

த நவரத்தினராசா,
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
03 - 01 - 1994

[சி-6922]

---

## கலை, வர்த்தக கல்லூரி
## C. C. A.

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

**கணக்கியல்:**

ஸ்ரீ B Com. (Hons)

| | |
|---|---|
| சனி ஞாயிறு | 4 - 5 FIRST in Com. |
| சனி ஞாயிறு | 5 - 6 B. Com: Part - I |
| திங்கள் வெள்ளி | 5 - 6 B Com Part - II |

**ஆரம்பம்: 08 - 01 - 1994**

குறிப்பு: அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(சி/6889) - நிர்வாகி.

---

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
சாவகச்சேரி பிரிவு

## தையல் பயிற்சி சான்றிதழ் வழங்கலும் துவிச்சக்கரவண்டி அதிர்ஷ்டம் பார்த்தலும்

09 - 01 - 94 ஞாயிறு காலை 9 - 30 மணிக்கு டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் மேற்படி வைபவத்தில் எமது பிரிவு அங்கத்தவர்களையும் - சான்றிதழ் பெறும் மாணவிகளையும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக் கொள்கிறோம்.

(28757) - செயலாளர்.

---

## 31ஆம் நாள் நினைவலைகள்

**திருநாவுக்கரசு ஜோன் அருட்செல்வன்**

(யாழ்ப்பாணக் கல்லூரி உயர்தர மாணவன்)

மண்ணுலகில்: **1974 — 01 — 11**
விண்ணுலகில்: **1993 — 12 — 06**

வீசும் புகழ் தீவகம் ஈந்த செல்வன்
பாசத்தால் உன்னை ஏந்திய தோள்கள் - விம்ம
உன் பிரிவு எமக்கு பிரியாவிடை தந்தனவோ
அன்பான உன் செயல்திறன்கள்
பழகிப்பதிந்தெங்கள் இல்லம் நிறைந்ததையா - உன்
கள்ளமற்ற உள்ளமதை கொள்ளை கொண்டு
இதயத்தை இடியாய் இடித்ததுவோ - உனது
இதயமும் துடிக்க மறந்தனவோ - செட்டி
வான் கலந்து சென்றுவிட மனம் வந்ததேனையா?
செட்டை முளைக்காத சிறு பறவைக் குஞ்சுகளாய்
யாம் விழி பிதுங்கி நிற்கையில்
தரணியில் வாழ்வதற்கு மறுத்துவிட்டு - நீ
விண்ணுலகம் சென்றதேனையா? - எம்மை
நீ பிரிந்து விண்ணுலகம் சென்றாலும்
எம் இதயத்தில் தினமும்
நீ வாழ்ந்து கொண்டேயிருக்கின்றாய்.

உன் ஆன்மா சாந்தியடைய இறைமைந்தர் இயேசுவை இறைஞ்சுகின்றோம்.

உனது பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.

58, பிரப்பங்குளம் லேன்,
யாழ்ப்பாணம்.

(6891)

---

## மீண்டும் சித்ராலயாவில் போட்டோஸ்ரற்

(சி-6885)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## பழையபடி வேதாளம்...!

பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதையாக யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு, தென்னிலங்கையில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் அனுப்பப்படும் தபால்கள், தபாற் பொதிகள் உடைக்கப்பட்டுச் சோதனை செய்யப்படுகின்றன!

யாழ்ப்பாணத்துக்கு விலாசமிடப்பட்ட ஒரு சில தபால்களுக்குள் பணநோட்டுக்களும், ஒரு சில பொதிகளுக்குள் ''பென்ரோச் பற்றரி''களும் வைத்து அனுப்பப்பட்டதாகவும், அதனைத் தொடர்ந்தே படையினரின் சோதனை தொடங்கியதாகவும் காரணம் கூறப்படுகிறது.

நத்தார், மற்றும் புதுவருடப் பண்டிகைகளை அண்டி குடாநாட்டு மக்களுக்கு கொழும்பிலிருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் பணம் மற்றும் அன்பளிப்புப் பொருள்கள் அவர்களின் உறவினர்களிடம் இருந்து வரும் என்பது படையினருக்கு நன்கு தெரியும்.

சென்ற 1992ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியிலும் இதே காலத்தில் வெளிநாடுகளில் இருந்து வந்த பெருந்தொகையான பணத்தையும், அன்பளிப்புப் பொருள்களையும் கையாடி — பசியாறி — ருசி கண்டவர்கள் ஸ்ரீலங்காப் படையினர். அதனால் 'பென்ரோச்', 'பணநோட்டு' என்று காரணங்களைக் கூறி இம்முறையும் தமது பகற்கொள்ளையை ஆரம்பித்திருக்கின்றனர்.

சர்வதேச அஞ்சல் சம்மேளன விதிகளின் பிரகாரம், அஞ்சல் செலவுக்கெனப் பணம் பெற்று வெளிநாடு ஒன்றில் இருந்து அனுப்பப்படும் தபால்கள், பதிவு செய்யப்பட்ட தபால்கள், சுங்கத் தீர்வைக்கு உட்பட்ட தபால்கள், பொதிகள் என்பன விலாசதாரரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

நாட்டின் சட்டவிதிகளை மீறும் வகையில் அனுப்பப்படும் பொருள்களை மட்டுமே தடுத்து வைக்கலாம். ஆனால் உடைத்து எவற்றையும் எடுக்க அரசுக்கோ அதிகாரிகளுக்கோ உரிமையில்லை. சந்தேகத்துக்கு உரிய கடிதங்கள் அல்லது பொதிகளுக்கு உரிய விலாசதாரரை அழைத்து அவரது முன்னிலையில் அவற்றை உடைத்து தடைசெய்யப்பட்ட பொருள்கள் இருந்தால் அதன் பொருட்டு தண்டம் விதிக்கலாம். பணமாக இருந்தால் கூட அதனைப் பறிமுதல் செய்ய முடியாது.

சர்வதேச அஞ்சல் சம்மேளனத்தில் அங்கத்துவம் வகிக்கும் ஸ்ரீலங்கா, சம்மேளன விதிகளை மீறும் விதத்திலேயே யாழ்ப்பாண மக்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள், பொதிகளில் உள்ள பணம், பொருள்களைச் சூறையாடுகிறது!

யுத்தம் நடைபெறும் சூழ்நிலையிலும், கடிதப் போக்குவரத்து எவ்வித தடங்கலும் இன்றி நடக்க வேண்டும் என்பது சர்வதேச விதி. ஆனால் ஸ்ரீலங்கா அரசு அதில் அக்கறை காட்டுவதில்லை. சர்வதேச விதிகளை மீறியே ஸ்ரீலங்கா அரசும், அதிகாரிகளும் தமது வசதிக்கும், வாய்ப்புக்கும் ஏற்றாற் போல குடாநாட்டு மக்களுக்குரிய கடிதப் போக்குவரத்தை தாமதிக்கிறார்கள். தாமதமும் ஒருவகைத் தடையே.

சிறையில் உள்ள அல்லது தடுப்புக்காவலில் உள்ள கைதி அல்லது சந்தேக நபருக்குக் கூட அவர்களின் உறவினர்களுடன் தொடர்புகொள்ள உரிமையுண்டு. அது மக்களின் அடிப்படை மனித உரிமை என்பதாலேயே பிரிந்திருக்கும் குடும்ப உறவினர்களுக்கிடையேயான கடிதத் தொடர்புக்கு செஞ்சிலுவைச் சங்கம் போன்ற தொண்டர் நிறுவனங்கள் உதவுகின்றன.

ஆனால் ஸ்ரீலங்கா அரசாங்கம் குடாநாட்டு மக்கள் மீது போக்குவரத்துத் தடை விதித்து, அவர்களை திறந்த வெளிச் சிறையில் வைத்திருக்கிறது.

அதற்கும் மேலதிகமாக, அவர்களின் அடிப்படை மனித உரிமையான குடும்பத் தகவல் அறியும் உரிமையை வெட்ட வெளிச்சமாக மீறிவருகிறது. சர்வதேச மன்னிப்புச் சபை, ''ஏசியாவாச்'' போன்ற மனித உரிமை அமைப்புகள் இதனைக் கவனத்தில் எடுக்காதது ஏன்?

# பலஸ்தீன இயக்கத்துடனான இவ்வாரப் பேச்சுக்கள் ரத்து

## இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் தகவல்

ஜெருசலேம், ஜன 5

சமாதான ஒப்பந்தத்தை அமுல் நடத்துவது தொடர்பாக இவ்வாரம் பலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் பேச்சுக்களை நடத்தப் போவது இல்லை என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் ஷிமொன் பெரேஸ் இத்தகவலை வெளியிட்டார்.

இதேவேளை— இஸ்ரேலுக்கு விஜயம் செய்துள்ள பிரிட்டிஷ் வெளியுறவுச் செயலாளர் டக்ளஸ் ஹேர்ட் மத்திய கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்தும் பாதையில் இருந்து திரும்பிச் செல்லும் கட்டத்தை இஸ்ரேலும் பலஸ்தீன விடுதலை இயக்கமும் தாண்டிவிட்டன என்று தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுகளை தொடர்ந்து நடத்துவது இனி இலகுவானதாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை— கைப்பற்றப்பட்ட அரபு பிரதேசத்தில் இஸ்ரேலிய படையினர் நேற்று நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர். அவர்கள் அனைவரும் அமைதி ஒப்பந்தத்தை எதிர்த்துவரும் ஹமாஸ் தீவிரவாதப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையில்— பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையே கடந்த செப்டம்பரில் வாஷிங்டனில் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தானதில் இருந்து இதுவரை காஸா பிரதேசத்தில் நடந்த சண்டைகளில் 50 பலஸ்தீனியரும் 20 இஸ்ரேலியர்களும் கொல்லப்பட்டுள்ளனர் என்று பி.பி.ஸி. தெரிவித்தது. (இ-எ)

# மினி செயலகங்கள் இயங்க ஆரம்பம்

தீவுப்பகுதியைச் சேர்ந்த ஊர்காவற்றுறை, வேலணை, நெடுந்தீவு பிரதேச செயலகங்கள் தவிர்ந்த ஏனைய பதினொரு பிரதேச செயலகங்களும் மினி செயலகங்களாக தரம் உயர்த்தப்பட்டு கடந்த திங்கட்கிழமை முதல் இயங்க ஆரம்பித்துள்ளன.

யாழ். செயலகங்களில் பணிபுரிந்த ஊழியர்கள் பலர் பிரதேச செயலகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

திங்கள் முதல் பிரதேச செயலகங்களில் தமது பதவிகளை அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டனர். (இ-17)

# காரைநகர் கம்பன் கழகம் நல்லூரில் 3 நாள் விழா

யாழ்ப்பாணம், டிச. 5

காரைநகர் கம்பன் கழகத்தின் ''கம்பன் விழா'' எதிர்வரும் 21, 22, 23 ஆம் திகதிகளில் காலை மாலை நிகழ்ச்சிகளாக நல்லூர் இளங்கலைஞர் கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முதல் நாள் தொடக்க நிகழ்ச்சிகள் பட்டிமண்டபத்துடன், 2ஆம் 3ஆம் நாட்கள் முறையே கலைதெரி அரங்கம், இலக்கிய சோலை, கலையரங்கம், கம்பன் இசையமுது, சுழலும் சொற்போர், வழக்காடு மன்றம், படைத்தவனைச் சந்திக்கும் பாத்திரங்கள், இலக்கியப் பேருரைகள் என்பன விழாவில் இடம்பெற உள்ளன.

காரைநகரில் 5 ஆண்டுகளாக நடைபெற்ற இவ்விழா இவ்வாண்டு நல்லூரில் இடம்பெறுகிறது. (க)

## யுத்தத்தில்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களத்தில் பின்னடைவுகளை இராணுவம் சந்தித்தது: பெரும எண்ணிக்கையில் படையினர் கொல்லப்பட்டனர்: மிகவும் மதிப்புள்ள போர்த்தளபாடங்கள் எதிரியினால் அழிக்கப்பட்டுள்ளன; அல்லது எதிரியின் கைக்குள் சிக்கியுள்ளன.

★ இப்படியான பின்னடைவுகளை பகுப்பாய்வு செய்வது எமது முதற்கடமை. எமது பலவீனத்தை நாம் அடையாளங்காண வேண்டும். அவற்றை திருத்த பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். படித்த பாடங்களுடன் நாம் திரும்பி வரவேண்டும். — என்றார்.

புதிய இராணுவ தலைமை நிர்வாக அதிகாரி மேஜர் ஜெனரல் லக்கி அல்கம,

''இப்போது தேர்தலுக்குதான் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. கிழக்கில் எம்மால் தேர்தலை நடத்த முடியுமானால், யுத்தத்திலும் எம்மால் வெற்றியீட்ட முடியும்'' — என்றார். (உ-எ)

## குடாநாட்டில்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காயமின்றித் தப்பினர். வீதிவழியே வந்த விறகு வியாபாரியான செ. தங்கராசா (வயது 49) என்பவருக்கு காலில் காயம் ஏற்பட்டது.

சாவகச்சேரி இலங்கை வங்கிக்கு முன்னால் பதின்மூன்று இடங்களில் குண்டுகள் வீழ்ந்து வெடித்த அடையாளங்கள் காணப்படுகின்றன. குண்டின் சிதறல்கள் வங்கியின் கண்ணாடி யன்னல்களை உடைத்து உள்ளே இருந்த மேசையைத் தாக்கியுள்ளன. ஒரு குண்டு வங்கி கட்டடத்தினுள் வெடித்துச் சிதறியுள்ளது.

வங்கிக்கு அருகில் இருந்த ஒரு வீட்டில் நான்கு பிள்ளைகள் படுத்திருந்த கட்டிலுக்குப் பக்கத்தில் ஒரு குண்டு வீழ்ந்து வெடித்தபோதிலும் தெய்வாதீனமாக பிள்ளைகள் உயிர் தப்பினர்.

சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கி கட்டடத்தில் நான்கு 50 கலிபர் ரவைகள் வீழ்ந்து தாக்கியதில் கூரை ஓடுகள் பலத்த சேதமடைந்தன.

சாவகச்சேரி பிரதான வீதியில் தம்பிப்பிள்ளை இராசமாணிக்கம் (வயது 35) என்ற மடுவைச் சேர்ந்த இளைஞர் காயமுற்றார்.

கோப்பாய் பாலத்திற்கு அண்மையில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தோரை நோக்கியும் துப்பாக்கிப்பிரயோகம் நடத்தப்பட்டது. இச்சம்பவத்தில் இணுவில் மஞ்சத்தடியைச் சேர்ந்த பொன்னம்பலம் தியாகராசா (வயது 56) என்பவர் காயமுற்றார்.

முன்னதாக காலை 5-15 மணியளவில் அரியாலை, கொழும்புத்துறைப் பகுதிகள் மீதும் வயாவிளான் பகுதிகளிலும் ஹெலித்தாக்குதல்கள் இடம்பெற்றன.

(உ-15-17-117-154)

## பேசவிருக்கும்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தரப்பு இன்றி நாம் நடத்த முடியாது. பேச்சுவார்த்தை நடத்த அவர்கள் தயாராக முன்வரவேண்டும். முன்கூட்டியே அவர்கள் பேசவிருக்கும் விஷயம் பற்றி எமக்கு தெரியவேண்டும். இனப்பிரச்சினை தொடர்பான பெரும்பாலான பிரச்சினைகள் ஏற்கனவே திருப்திகரமாக தீர்த்துவைக்கப்பட்டுவிட்டன.

மாகாண சபைகள் ஊடாக முன்னர் எப்பொழுதும் இல்லாத வகையில் அதிகாரப்பரவலாக்கல் இடம்பெற்றுள்ளன மேலும் அதிகாரப்பரவலாக்கல் செய்வது பற்றிய பரிசிலனை செய்ய நான் தயாராக உள்ளேன். அப்படியான அதிகாரப்பரவலாக்கல் வடக்கு-கிழக்குக்கு மட்டும் என்பவற்குநான் சம்மதிக்கமுடியாது.

எல்லா பிரஜைகளும் சமமான அதிகாரங்கள் உரிமைகள் மற்றும் சலுகைகளை அனுபவிக்க வேண்டும். பிரஜைகள் மத்தியில் இரண்டு அல்லது மூன்று பிரிவுகள் ஏற்படுவதை நான் அனுமதிக்கமாட்டேன்,

சிறுபான்மையினரை ''சூப்பர்'' ரக பிரஜைகளாகவும் பெரும்பான்மையினரை இரண்டாந்தர பிரஜைகளாகவும் மாற்றும் எதற்கும் நான் சம்மதிக்க முடியாது.

தமிழர்களுக்கு பாரம்பரிய தாயகம் என்று கூறும் பிரதேசம் உண்டு. சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் அப்படி கிடையா. இதுஎவ்வளவு துக்ககரமான விஷயம்? அதனால் தான் இது இனப்பிரச்சினை அல்ல என்று நான் கூறுகின்றேன் என்றார்.

இன்னொரு கேள்விக்கு பதிலளிக்கையில்—

கிழக்கு மாகாணத்தில் மாகாணசபைத் தேர்தலை நடத்தும் எண்ணம் இல்லை என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் சாத்தியமான பகுதிகளில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தவே அரசு எண்ணியுள்ளது என்றும் அவர் கூறினார்.

வேறு ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில்—

''நிதி அமைச்சர் ஒருவரையும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ஒருவரையும் நியமிக்காதது ஒரு பிரச்சினை அல்ல. முக்கிய நிதி மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை நான் கையாள விரும்புகின்றேன். அதில் என்ன பிழை உண்டு?

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ஒருவரை நியமிப்பதன் மூலம் நிலைவரத்தில் அப்படி என்ன மாற்றம் ஏற்படப்போகிறது என்பது எனக்குத் தெரியவில்லை. அல்லது அப்படி ஒரு நியமனம் பிரச்சினையை இலகுவாக்குமா? என்று தெரிவித்தார்.

## இந்திய உதவி..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதையும்—

ஆனால் எந்த வெளிநாட்டினது உதவியும் வடக்கு—கிழக்கு பிரச்சினைக்குக் கோரப்படமாட்டாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருப்பதையும்— அந்தப் பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

ஆயினும் அமைச்சர் ஹமீத் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எவ்வகையிலேனும் இந்தியாவிடமிருந்து உதவி பெறத் தீர்மானித்துள்ளார் என்றும் 'லங்காதிப' குறிப்பிட்டுள்ளது.

(உ-9)

## குருநகர்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தீர்க்கப்பட்ட துப்பாக்கி வேட்டுக்கு அவர் இலக்காகி இருக்கலாமென அவருடன் கூடச் சென்ற மற்றும் இரு மீனவர்கள் தெரிவித்தனர்.

குருநகரைச் சேர்ந்த ஏரோணி வெனிக்கிலோஸ் (வயது 37) என்பவரே காணாமல் போனவர் ஆவார்.

படையினரிடம் சிக்குண்டு மூன்று வருடங்கள் இவர் தடுத்து வைக்கப்பட்டு 9 மாதங்களுக்கு முன்பே விடுவிக்கப்பட்டு வீடு திரும்பி இருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-51)

## வடமராட்சி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களுடன் கட்டுமரம் ஒன்றில் குப்புற சடலமாகக் கிடக்கக் காணப்பட்டார். ஏனைய எட்டு மீனவர்களுக்கும் என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

மூன்று கட்டுமரங்களிலும் பொருத்தப்பட்டிருந்த இயந்திரம் மற்றும் கடற்றொழில் உபகரணங்களும் காணாமற் போயிருந்தன. மீனவர்களின் உடுப்புகள் மாத்திரம் காணப்பட்டன.

காணாமற்போன எண்மரின் விவரமும் வருமாறு:-

★ திருச்சிற்றம்பலம் அமல்ராஜ் (வயது 21).

★ எட்வேர்ட் அன்ரன் உதயகுமார் (வயது 23).

இவர்கள் இருவரும் சக்கோட்டை வாசிகள். ஏனையோர் பலாலிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து சக்கோட்டையில் வசிப்பவர்கள்.

★ சின்னத்துரை வியாகராஜா (40 வயது) - 5 பிள்ளைகளின் தந்தை இடம்பெயர்ந்தோர் மீனவர் சங்கத்தின் உபதலைவர்.

★ சின்னப்பொடி பாலசிங்கம் (42 வயது)— 7 பிள்ளைகளின் தந்தை.

★ எஸ் எட்வேர்ட் இராசநாயகம் (31 வயது)— மூன்று பிள்ளைகளின் தந்தை.

★ நியோப்பிள்ளை அன்ரன் (30 வயது) —2 பிள்ளைகளின் தந்தை.

★ தேவதிரவியம் ஜெயரட்ணம் (22 வயது)

★ செபஸ்தஸ் அந்தோனிப்பிள்ளை (22 வயது)

காணாமற்போன ஜெயரட்ணத்தின் தந்தையாரான தேவதிரவியம் நான்கு மாதங்களுக்கு முன்பு கடலில் கடற்படையின் சூட்டுக்கே பலியானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

காணாமற்போன மீனவர்கள் குறித்து தகவல் பெற்றுத் தருமாறு செஞ்சிலுவைச் சங்கத்திடம் ... கோரப்பட்டுள்ளது.

(... 170)

## அகதிகளுக்கு உலர் உணவு

வலிகாமம் மேற்கு பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட 28 முகாம்களில் தங்கியுள்ள சுமார் 1215 இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு உலர் உணவு வழங்கப்படுகின்றது.

இவர்கள் காரைநகர், காங்கேசன்துறை, மாதகல், சில்லாலை, அளவெட்டி ஆகிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து சித்தன்கேணி, சங்கானை, தொல்புரம், சுழிபுரம், சங்கரத்தை, வட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் தங்கியுள்ளனர்.

அண்மையில் பெய்த பெருமழையினால் இவர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர்.

உலர் உணவு வழங்கும் நடவடிக்கையை பிரதேச செயலர் திரு. இ. இளங்கோவன் மேற்கொண்டுள்ளார். (இ 175)

## விஞ்ஞான நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜன.5

யாழ். விஞ்ஞான சங்கம் நடத்தும் விஞ்ஞான நிகழ்ச்சி எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். 28 கல்லூரிகள் பங்குபற்றும் இந்த நிகழ்ச்சியில் விஞ்ஞான பேச்சுப் போட்டி, விஞ்ஞான வினா - விடைப் போட்டி ஆகியவை இடம்பெறும். (த)

## கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 5

தொடர்ந்து 25 வருடங்களாக திருவெம்பாவை பூஜை நாட்களில் வீதிப் பஜனையை மேற்கொண்டு வந்த ஈச்சமோட்டை ஸ்ரீ ஞானவைரவர் இந்து இளைஞர் மன்றத் தலைவர் ந சர்வகுணசீலனை யாழ். மாநகர ஆணையாளர் பொ. பாலசிங்கம் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார்.

ஈச்சமோட்டை கலட்டிப் புலம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற இந்தப் பாராட்டு நிகழ்வில் அடியார்கள் பலரும் கலந்துகொண்டனர். (ஒ- 17)

## பிரபாவுடன்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு விதமானவை என்பது தெளிவாகியுள்ளது. மக்களின் எதிர்பார்ப்பு இப்பிரச்சினைக்கு எப்படியாவது தீர்வு ஏற்பட வேண்டும் என்பதாகும். ஆனால் தலைவர்கள் தெளிவான எந்த ஆலோசனைகளையும் முன் வைக்கவில்லைத் தீர்வுக்கான நல்ல ஆலோசனைகள் முன்வைக்கப்படவில்லை.

யுத்தத்தின் மூலம் தீர்வு காண முடியாது என்பதை மக்கள் தெரிந்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரனுடன் சபாநாயகர் என்ற வகையில் அல்லாமல் பிரசை என்ற வகையிலேயே பேச முன்வந்துள்ளேன். ஐ.தே.கவின் அல்லது அரசின் தேவை கருதி இப்பயணத்தை நான் மேற்கொள்ளவில்லை.

இப்படியான தேசிய பிரச்சினையில் நான் ஈடுபாடு காட்டுவதற்கு ஜனாதிபதி எதிர்ப்பு எதனையும் காட்டவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சர்களுக்கும் இவ்விடயம் குறித்து அறிவித்துள்ளேன்.

என்னிடம் பல யோசனைகள் அடங்கிய திட்டமொன்று தயாராகவுள்ளது. எனினும் விடுதலைப் புலிகளினது ஆலோசனைகளையும் அலசி ஆராய்ந்து ஓர் உடன்பாட்டுக்குவரக்கூடிய பேச்சுக்களில் ஈடுபடுவதே எனது பிரதான நோக்கம்.

விடுதலைப்புலிகளுக்கு அரசின் மீது நம்பிக்கை இல்லை. அரசுக்கு புலிகள் மீது நம்பிக்கை கிடையாது. இரு தரப்பினரிடமும் பெரு விரிசல் ஏற்பட்டுள்ளது. இந்த விரிசலை—இடைவெளியை— சீர் செய்வதற்கு நான் முயற்சிப்பேன்

இந்த யுத்தம் வெற்றி பெறக் கூடியதொன்றல்ல. தேர்தல் நடத்த முடியாத சூழ்நிலை உண்டு. இவ்விடயத்தில் முக்கியம் என்னவெனில் அதிகாரத்தை சற்றுக் கூடுதலாக கொடுத்தாலும் குறைத்துக் கொடுத்தாலும் எமது நாட்டு மக்களுக்குத்தானே கொடுக்கிறோம் என்ற மனப்போக்கு ஏற்பட வேண்டும்.

இன்று முழு உலகமும் அதிகாரத்தைப் பரவலாக்கும் பக்கத்துக்கே திரும்பியுள்ளது. நாம் மட்டும் அதிகாரத்தை கட்டியாள நினைத்தால் அது தவறான நோக்கமாகும்— என்பதாகும். (அ-3)

இலங்கை
பட்டயக் கணக்காளர் நிறுவனம்
மாணவர் தகவல் மற்றும்
சேவை நிலையம்
இல: 140, பலாலி வீதி, திருநெல்வேலி.

இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனமானது மேற்படி நிலையத்தின் ஊடாக யாழ். மாணவர்களுக்கான தகவல் மற்றும் சேவைகளை வழங்கி வருகின்றது. க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் 2 திறமைச் சித்திகள் உட்பட 3 பாடங்களில் சித்தி பெற்றவர்கள் புதிய மாணவர்களாக தம்மைப் பதிவுசெய்து கொள்ளலாம். ஜூலை மாதத்தில் நடைபெறவிருக்கும் தகுதிச் சான்றுப் பரீட்சைக்கு (Licentiate-I) தோற்றும் மாணவர்கள் 15-01-94இற்கு முன்னர் தம்மைப் பதிவு செய்திருக்க வேண்டும். பதிவு செய்தல் தொடர்பாக எமது நிலையத்தில் தொடர்பு கொள்ளவும்.

சோமேஸ்வரன், இராஜநாயகம் அன்கோ
(28761)

நினைவு கூர்தல்
அமரர் எல். ஆர். முத்தையா

அமரர் எல். ஆர். முத்தையா அவர்களின் நினைவாக இன்று நாம் அவரது சேவையை நோக்குமிடத்து, அவர் பல நிறுவனங்களின் ஊடாக யாழ். மாவட்டத்தில் அல்லலுறும் மக்களுக்காக அயராது உழைத்துள்ளார் என்பது தெளிவாகும்,

அவர் ஆர். ஆர். எவ். '83 நிறுவனப் பிரதிநிதியாக இணைய ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராக இணைந்து, எம்முடன் இணைய குடும்பத்தில் மூத்த மகனாகவும், இணையத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். பல சந்தர்ப்பங்களில் இணையத்தை பிரதிநிதித்துவப் படுத்தி இணைய வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றினார்.

தொடர்ந்து, இணையத்தின் தோற்றங்களில் ஒன்றான ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் உதவியுடன் செயற்படும் நிறுவனங்களின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

இவரது இழப்பு யாழ். மாவட்டத்தில், குறிப்பாக எமது நிறுவனங்களுக்கு ஒரு பெரும் இழப்பாகும். இவரது பணியை நினைவு கூருமுகமாக இணையக் காரியாலயத்தில் இன்று 05 - 01 - 1994 பிற்பகல் 2-00 மணியளவில் ஞாபகார்த்தக் கூட்டமும், அவரது உருவப்படத் திரை நீக்கமும் நடைபெறும்.

யாழ் மாவட்ட
அரச சார்பற்ற
நிறுவனங்களின் இணையம்,
100, இராசாவின் தோட்டம்.
யாழ்ப்பாணம்.
[சி-6923]

COMPUTER PROGRAMMING
IN
BASIC LANGUAGE
4 MONTHS

திங்கள், புதன் வகுப்புகள்
ஆரம்பம்: 12 - 01 - 1994
8-30 மணி

Lectures by:
S. P. SIVAPATHASUNDARAM,
M. I. D. P. M. (London)

★ முதல் அறிமுக வகுப்பு இலவசம்
★ கட்டணம் தவணை முறையில் மாதம் - ரூ 400/- மட்டுமே
★ Basic கற்கும் மாணவர்களுக்கு Lotus, Word star பாடநெறிகளுக்கான கட்டணங்களில் சலுகை
★ அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ கூடிய செய்முறைப் பயிற்சி
★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
(Pioneers in Computer Education)
16, 3rd Cross Street, Jaffna.
(சி-6896)

மக்னெற்றிக் ஸ்தாபனம்
செங்குந்தா லேன், கல்வியங்காடு
கல்வியாண்டு 1994
ஆண்டு 5 முதல் O/L வரை
ஆரம்பம்: இன்று 05 - 01 - 1994
மாலை 3-00 மணி

| | |
|---|---|
| கணிதம் வாமதேவன் சிவக்குமார் | சமூகக்கல்வி குமாரதாசன் |
| விஞ்ஞானம் அரசகுலசூரியன் சிவக்குமார் | வர்த்தகம் இராஜன் |
| ஆங்கிலம் ஜோன்சன் | தமிழ் துரைராஜா யாதுமூரான் |

குறிப்பு: எம்மிடம் கற்கும் O/L மாணவர்களுக்கு ஆண்டு 10ற்குரிய கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களை எவ்வித மேலதிக கட்டணமும் இன்றி கல்வி கற்பிக்கப்படும்.
[28777]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SCIENCE ACADEMY
NALLUR

**கல்வியாண்டு 1994**

ஆண்டு 6 முதல் 11 வரை
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
**06-01-94 மாலை 3.00 மணி**
✲ எமது வழமையான ஆசிரியர் குழு ✲
(சி/6924)

---

# SPECIAL ENGLISH CLASSES

★ A/L, O/L பரீட்சை முடித்தவர்களுக்குரியது.
★ Spoken English with Grammar (ஆரம்ப கற்கை நெறி)
★ G. C. E. (O/L) Dec. 94 (அவுஸ்ரேலியாக ஆண்டு 8, 9, 10, 11 பாடத் திட்டங்கள் ஆரம்பத்திலிருந்து போதிக்கப்படும்)
★ Year 10, 9, 8, 7, 6

ஆரம்பம்: **06 – 01 – 1994** (வியாழன்)

விபரங்களுக்கு:
**NEW ENGLISH ACADEMY**
82, ருத்திரக்குறை வீதி
ரீகு... யாழ்ப்பாணம்
(சி-7006)

---

# யூனிவேர்சல்

கந்தர்மடம்
யாழ்ப்பாணம்

புதிய வகுப்புகள் ஆரம்பம்
**09-01-1994 காலை 7.30 மணி**
✲ 05 - 01 - 94இற்கு முன்னர் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
- அதிபர்
(சி-6878)

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்
(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**கல்வியாண்டு - 1994**

O/L EVENING CLASSES (3-15 — 6-00)
SAT., SUN. CLASSES (8-00 — 1-00)
**ஆண்டு 10, 9, 8, 7, 6**
ஆரம்பம்: 06 – 01 – 1994 (வியாழன்) மாலை 3-15 மணி
★ அனுமதிகளை முன்கூட்டியே பதிவு செய்யவும்.
(சி-6865)

---

புதிய
# எடிசன் அக்கடமி
✲✲✲✲✲✲✲✲✲

(கொக்குவில் இந்து அருகில்)
27, கே கே எஸ் வீதி கொக்குவில்.

**கல்வி ஆண்டு 1994**

ஆண்டு 4 முதல் O/L வரை யாழ். முன்னணி ஆசிரியர் குழுவின் இணைந்த சேவை.

கணிதம்: திரு. B. P பாஸ்கரன்
விஞ்ஞானம்: திரு. J. R. சூரி, திரு. J. J. கொலின்ஸ்
சமூகக்கல்வி: திரு க. கோபி
தமிழ்: திரு தங்கவேல், திரு. S. கதிர்காமத்தம்பி
ஆங்கிலம்: திரு. C. சத்தியமூர்த்தி
வர்த்தகம்: திரு. தர்மராஜன்
சமயம்: திரு. கோ. இராசலிங்கம்

**ஆரம்பம்: 06-01-1994**
வியாழன் பி. ப 4 மணி

முக்கிய குறிப்பு
✲ O/Lற்கு பாடத்திட்டம் 8 ஆம் மாதம் பூர்த்தியாக்கப்படும்
✲ கடந்த 8 வருட வினாக்கள் மீட்கப்படும்.
(சி/6920)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 05 01 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

---

உ

# பாஷாண உத்வாசனமும் சபிண்டீகரணமும்

வியாபாரிமூலை இன்பர்சிட்டி சித்திவிநாயகர் ஆலய பிரதம குருவும் சமரவாகு கற்பக விநாயகர் ஆலய பிரதம குருவுமாகிய

**மகா கணபதிக்குருக்கள் சுப்பிரமணியக் குருக்கள்**

அவர்களது பாஷாண உத்வாசனமும் சபிண்டீகரணமும்:-

பாஷாண உத்வாசனம் — 06 – 01 – 1994
வியாழக்கிழமை காலை — 6-00 மணி
சபிண்டீகரணம் – 08 – 01 – 1994
சனிக்கிழமை — மதியம்

இக்கிரியைகளில் அனைவரும் பங்கு கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்

இப்படிக்கு
திருமதி சுப்பிரமணியக் குருக்களும் குடும்பத்தினரும்
ம. திருஞானசம்பந்தக் குருக்களும் சகோதரர்களும்
[28784]

---

# ஹோமியோ கிளினிக் அன்ட் பார்மசி

டாக்டர் எம். வேலுப்பிள்ளையின் ஹோமியோபதி சிகிச்சை நிலையம் தற்போது யாழ்ப்பாணம், சிவகுருநாதர் வீதி, 39 ஆம் இலக்க மனையில் நடைபெறுகின்றது. நோயாளிகள் தொடர்ந்து அங்கு சிகிச்சை பெறலாம்.
(28779)

---

# SHAMROCK

சுண்டுக்குளி

**O/L & YEAR 10**

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | J. R. சூரி |
| கணிதம் | — | தயாளன் |
| சமூகக்கல்வி | — | இக்னேசியஸ் |
| தமிழ் | — | Miss ஜெஸ்மின் |
| வர்த்தகம் | — | ராஜன் |
| ஆங்கிலம் | — | பிரபல ஆசிரியர் |

ஆரம்பம் **06 - 01 - 1994**
வியாழன் பி. ப. 3 மணி
(28781)

---

# G. A. Q. - 94/95

**பேரரதனை**

★ A/Lஇல் கலை, வர்த்தகம், விஞ்ஞானம் எத்துறையிலும் 3 பாடங்கள் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் மேற்குறிப்பிட்ட பாடநெறிக்கு விண்ணப்பிக்கலாம்.
★ இதற்கான பல்கலைக்கழகப் பதிவுகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.
★ இதற்கான விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன விவரங்கள், நேரஅட்டவணை என்பவற்றை நேரில் பெற்றுக்கொள்ளவும்.

விவரங்களுக்கு
ஸ்ரீ. அருள் நங்கை
**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(சி-7004)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்: 25 – 08 – 1949
விண்ணில்: 05 – 12 – 1993

**அமரர் கந்தையா விக்கினேஸ்வரன்**
( விக்கில் )
(றியோ கபே — யாழ்)

திதி: **05 - 01 - 1994**

அன்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய், எங்கள் குடும்ப ஒளிவிளக்காய், எம்மை வழிநடத்தி விமானக் குண்டு வீச்சுக்கு பலியாகி எம்மை மீளாத்துயரில் ஆழ்த்திய எங்கள் அன்புத் தெய்வமே!

தங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்,
பெற்றோர், சகோதரர்கள்,
உறவினர்கள்.

49, முருகேசர் வீதி,
முத்திரைச் சந்தி,
நல்லூர்.
(28783)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

# திருக்குறள் முனுசாமி காலமானார்

முதுபெரும் தமிழ் அறிஞர் திருக்குறள் வி. முனுசாமி நேற்று சென்னை பொது மருத்துவமனையில் மாரடைப்பால் காலமானார் அவருக்கு வயது 83. (க)

---

## பாதுகாப்பு...

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ததற்காக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் அதிகாரி ஒருவர் நாட்டில் இருந்து வெளியேற்றப்பட இருப்பதாகக் கூறி செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிற்கு களங்கம் ஏற்படுத்தும் வகையிலான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதை அடுத்தே பாதுகாப்பு வழங்கும் நடைமுறையை மறுபரிசிலனை செய்யும் நிலைமை ஏற்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு கொழும்பில் பத்திரிகைகளுக்கு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் 23 ஆம் திகதி இடம்பெற்ற ''பற்றறி'' கடத்தும் முயற்சியில் ஈடுபட்டவர் இலங்கையர் ஒருவரே என்றும்—

கிறனன்பெஸ்டர் என்ற செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி அல்லர் என்றும்—

அவர் எந்தச் சந்தர்ப்பத்திலும் சந்தேகிக்கப்படவோ, தடுத்து வைக்கப்படவோ, விசாரிக்கப்படவோ இல்லை என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (அ-5)

---

# VIBGYOR ACADEMY

குளப்பிட்டி வீதி
(மில் அருகில்)
ஆனைக்கோட்டை.

ஆண்டு 4 முதல்
O/L வரை
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
**6-01-1994**
(மாலை 3 மணி)

விஞ்ஞானம்:- J.J. கொலின்ஸ்
கணிதம்:- B.P. பாஸ்கரன், ஜெயக்குமார், ஜெயா
தமிழ்:- தங்கவேல்
சமூகக்கல்வி:- கோபி
வர்த்தகம்:- தர்மராஜன்
ஆங்கிலம்:- C. சத்தியமூர்த்தி, S. ஜெயானந்தன்
(சி/6925)

---

# இன் கல்வி நிலையம்

பலாலி வீதி,
திருநெல்வேலி.

புலமைப் பரிசில்
**1994 ஆம்** ஆண்டுக்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன

கணிதம் —
★ S.S. பிள்ளை
தமிழ் —
★ I. திருவாசநாதன்
மாதாந்தப் பரீட்சை நடைபெறும்.
(சி-6894)

---

# லக்கி இன்ஸ்ரியூட்

K. K. S றோட்
சுன்னாகம்.

**SPOKEN ENGLISH by BRITTO**
புதிய பிரிவு ஆரம்பம்
**06-01-1994**
வியாழன்
மாலை – 3.30 மணி
(6766)

---

# பெப்ரவரியில் வடக்கு யுத்த களமாகும்!

## இராணுவ ஆய்வாளர்கள் கருத்து

பெப்ரவரி மாதமளவில் வட பிராந்தியம் யுத்த களமாக மாறப் போவது பெரும்பாலும் சாத்தியமாகும் என இராணுவ ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிப்பதாக கொழும்பு தமிழ் வாரப் பத்திரிகை ஒன்று குறிப்பிட்டிருக்கிறது.

கடந்த வருடத்தில் மாத்திரம் விடுதலைப் புலிகள் சுமார் 50 கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களை கைப்பற்றியுள்ளனர் என்றும் அந்தப் பத்திரிகை சுட்டிக் காட்டியிருக்கிறது.

இந்த ஆண்டில் இராணுவ நடவடிக்கைகள் முன்னொரு போதும் இல்லாத அளவுக்கு விஸ்தரிக்கப்படவிருப்பதாகவும் அப்பத்திரிகை தெரிவித்தது. (உ-3)

# 'மாஹோ' ஓரிரு தினங்களில் 2,500 தொன் மாவுடன் வரும்

யாழ்ப்பாணம், ஜன. 5

கொழும்பு துறைமுகத்தில் பொருள்கள் ஏற்றிக்கொண்டிருக்கும் ''வாதுவ'' கப்பல் எதிர்வரும் 9 ஆம் திகதி பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாளை மறுதினம் கொழும்பில் இருந்து இக்கப்பல் வடக்கு நோக்கிப்புறப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை—

தற்சமயம் திருகோணமலையில் தரித்து நிற்கும் 'மாஹோ' கப்பல் 2 ஆயிரத்து 500 மெற்றிக்தொன் மாவுடன் ஓரிரு தினங்களில் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பாக்கப்படுகிறது. (உ-3)

# 12 இராணுவ சார்ஜண்டுகள் கிரனேட் வெடித்ததில் காயம்

## புதுவருட விருந்தில் களேபரம்

கொழும்பு, ஜன. 5

வவுனியா அட்டம்பேகஸ்கட என்ற இடத்திலுள்ள இராணுவ முகாமில் புதுவருட தினத்தை ஒட்டி நடைபெற்ற வைபவம் ஒன்றில் கிரனேட் ஒன்று தவறுதலாக வெடித்ததில் 12 இராணுவ சார்ஜண்டுகள் படுகாயமடைந்தனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

புத்தாண்டு இரவு இடம்பெற்ற விருந்து வைபவத்தில் மதுபானம் பரிமாறப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வர்ண வாயுக்களை வெளியேற்றும் ''பொஸ்லைட்'' கிரனேட் என்ற ஆபத்தில்லாத— கிரனேட்டுகள் வெடிக்க வைக்கப்பட்டன. அப்போது தவறுதலாக மற்ற கிரனேட் ஒன்றும் வெடித்தது.

இதில் 12 இராணுவ சார்ஜன்டுகள் காயமடைந்தனர். அவர்கள் பின்னர் வவுனியா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அமிர்தலிங்கம் ஆயிலியம்
(ஊரெழு)

ஊரெழுவைச் சேர்ந்த திருமதி அமிர்தலிங்கம் ஆயிலியம் 4-1-94 அன்று காலமானார்.

இவர் ஊரெழு வல்லிபுரம் செல்லாச்சி தம்பதிகளின் இளையமகளும், தம்பிஐயா அமிர்தலிங்கத்தின் அன்பு மனைவியும், அமிர்தவாசன் (கனடா), அமிர்தகௌரி இராசநாயகம் (கனடா), அமிர்தானந்தன், அமிர்தயோகன், அமிர்தசிவம் (கனடா), கண்ணதாசன் ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (5-1-94) இன்று பி.ப. 2 00 மணிக்கு ஊரெழு பொக்கணை மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
இ.விஜயசேகரம்
(28786)

## திருமதி. சபீனா திருச்செல்வம்
MRS. SABENA THIRUCHELVAM

யாழ். பிரதான வீதியில் வசித்து வந்த திருமதி சபீனா திருச்செல்வம் Toronto, Canada வில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பி. எஸ். திருச்செல்வத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற லீலா யோசவ்வின், யோசவ், யோகவதி, மகிழ்வதி, இம்மனுவேல், கமலாவதி இவர்களின் அருமைத் தாயாரும், என். பி. ஜெகநாதன், பௌலின், எஸ். பெரியநாயகம், என், அந்தோனிப்பிள்ளை, டாக்டர் ராஜினி, டொக்டர் யோசவ் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஆன்ம சாந்திக்காகவும், நல்வாழ்வின் நன்றியாகவும் இரங்கல் திருப்பலி யாழ். மரியன்னை பேராலயத்தில் 7- 1- 94 வெள்ளி மாலை 5.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும்,

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அருட்திரு. ஜே. பி. ஈ. செல்வராஜா
(28774)

## DR. சண்முகலிங்கம் பாலச்சந்திரன்
(ஊர்காவற்றுறை முன்னாள் வைத்திய அதிகாரி)

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 192, மானிப்பாய் வீதி, வண்ணார்பண்ணையில் உள்ள இல்லத்தில் இன்று (5 - 1 – 94) நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
பா. மதன்மோகன் [மகன்]

192, மானிப்பாய் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
(28782)

## மாசிலாமணி ஞானாநந்தர்
(ஆனந்தன்)
(நயினாதீவு)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், 471/1 காங்கேசன்துறை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மாசிலாமணி ஞானாநந்தர் (முன்னாள் பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ். பல்கலைக் கழகம்) நேற்றுக் காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (5-1-94) காலை 9 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மாசிலாமணி
(தகப்பன்)
(இளைப்பாறிய அதிபர்)

471/1, கே. கே. எஸ். றோட்.
(28787)